

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (7.3.2024) முகாம் அலுவலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தனது பிறந்தநாளை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளான மார்ச்–1 அன்று பிறந்த 30க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தங்கமோதிரம் அணிவித்து பரிசுப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., டாக்டர் அரிகரன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், க.சௌந்தரராசன், ப.கார்த்திவேல்மாறன், கோல்டு எஸ்.பிரபு உட்பட பலர் உள்ளனர்.

### அமைச்சர்கள் ஐ.பெரியசாமி - அர.சக்கரபாணி - கயல்விழி செல்வராஜ் பங்கேற்பு!

# திண்டுக்கல்லில் உலக மகளிர் தின விழா!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

திண்டுக்கல், மார்ச் 8-

உலக மகளிர் தின விழா, திண்டுக்கல் அங்கு விலாஸ் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நாளை (9.3.2024 - சனிக்கிழமை) மாலை 4:30 மணி அளவில் கழகத்துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெறுகிறது.

வரவேற்புரை தமிழ் ரசிரவிக்குமார் எம்.எல்.ஏ., மகளிர் (தொண்டரணி இணைச் செயலாளர்) சிறப்புரை- ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, (திண்டுக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர்), சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் கீதா ஜீவன் (தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர்), ஐ.பி.செந்தில்குமார் (திண்டுக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பழனி சட்டமன்ற உறுப்பினர்) முன்னிலை- மகளிர் அணித்தலைவர் விஜயா தாயன்பன், மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் பஇராணி, மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் குமரி விஜயகுமார். வாழ்த்துரை-ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மகளிர் அணி துணைச் செயலாளர் ,பா வேலுசாமி திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ,எஸ். காந்திராஜன் வேடந்தூர் சட்டமன்ற உறுப்பினர், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் திண்டுக்கல் மாநகரச் செயலாளர் ச. ராஜப்பா, காயத்ரி ஸ்ரீகாந்த் புதுச்சேரி மாநில மகளிர் அணி அமைப்பாளர் நன்றியுரை திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உமா மகேஸ்வரி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் இந்திரா திருநாவுக்கரசு, திண்டுக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், முத்துலட்சுமி திண்டுக்கல் மேற்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர், இந்திராணி திண்டுக்கல் மாநகர மகளிர் அணி அமைப்பாளர் அருள் வாணி திண்டுக்கல் மாநகர மகளிர் தொண்டரணி அமைப்பாளர்.

இந்த நிகழ்ச்சியில் மாநில மாவட்ட ,மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் கழக மகளிர் அணியினர் அதிகளவில் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கின்றோம். ஜெ.ஹெலன் டேவிட்சன் மாநில மகளிர் அணி செயலாளர், நாமக்கல் பஇராணி மாநில மகளிர் தொண்டரணி செயலாளர்.

# கர்நாடக மாநிலத்தில் 10 ஆம் வகுப்பு புத்தகத்தில் பெரியார் பாடம்!

## காங்கிரஸ் அரசு உத்தரவு!

பெங்களூரு, மார்ச் 8-

கர்நாடக பள்ளிக்கல்வி பாடப்புத்தகங்களில் பா.ஜ.க. அரசால் செய்யப்பட்ட மாற்றங்கள் திருத்தியமைக்கப்படும் என்று காங்கிரஸ் கட்சி சட்டப்பேரவை தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளித்தது. சட்டப்பேரவை தேர்தலில் ஜெயித்து ஆட்சிக்கு வந்ததும், ஓய்வு பெற்ற வரலாறு பேராசிரியர் மஞ்சுநாத் ஹெக்டே தலைமையில், பாடப்புத்தக திருத்த குழு அமைக்கப்பட்டது.

மஞ்சுநாத் ஹெக்டே தலைமையிலான குழு பாடப்புத்தகங்களில் செய்ய வேண்டிய திருத்தங்களை பள்ளிக்கல்வித்துறைக்கு பரிந்துரை செய்தது. அதன்படி, கன்னட பள்ளி பாடப்புத்தகங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் 2024-2025ம் கல்வி யாண்டிலிருந்து நடைமுறைக்கு வரும். பா.ஜ.க. அரசால் பாடப்புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்ட, சந்திர சேகரா கம்பாரா, கிரிஷ் கர்னாட், தேவிதாச மாரியப்பா, அனந்தமூர்த்தி ராவ், தேவனூர் மகாதேவா ஆகியோரது பாடங்களும், செய்யுள் பாடல்களும் பாடப்புத்தகங்களில் மீண்டும் சேர்க்கப்படுகின்றன.

பத்தாம் வகுப்பு வரலாறு பாடப்புத்தகத்தில் சமூக சீர்திருத்த மற்றும் மத சீர்திருத்த இயக்கங்கள் குறித்த பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. சமூக சீர்திருத்தவாதிகளான பெரியார் மற்றும் சாவித்ரிபாய் புலே ஆகியோரது பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 7ம் வகுப்பு பாடப்புத்தகத்தில் இடம்பெற்றிருந்த பெரியார் பாடங்கள் பா.ஜ.க. அரசால் நீக்கப்பட்ட நிலையில், பெரியார் குறித்த பாடங்கள், இப்போது 10 ஆம் வகுப்பு வரலாறு புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

### நொளம்பூர் வே. ராஜன் முன்னிலை!

### மதுரவாயல் எம்.ரூபன் தலைமை!

# 146வது வட்டத்தில் 3000 நபர்களுக்கு அறுசுவை உணவு!

### காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, மார்ச் 8-

கழகத் தலைவர் முதலவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 146 வது வட்டம்,காமராஜர் நகர், லட்சுமி நகர், சோழன் நகர், தனலட்சுமி நகர், பாரதிதாசன் நகர், ராஜீவ் காந்தி நகர் ஆகிய பகுதிகளில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் வளசரவாக்கம் மண்டலக்குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில், 146 வது வட்டக் கழக செயலாளர் மதுரவாயல் எம். ரூபன் தலைமையில், மாவட்ட துணை அமைப்பாளர்கள் பிவாசு, எம் சங்கர் பி.வி. சௌந்தர், வ. கண்ணன், எம் சுப்பு, என் இளவரசன், ஜெ.ஹேமச்சந்திரன், பி. சிவக்குமார் ஏ. வினோத்குமார் ஆகியோரின் ஏற்பாட்டில் கழக கொடியினை ஏற்றி வைத்து இனிப்பு, நோட்டு புத்தகங்கள், மற்றும் காலை, மதியம் இரு வேலையும் 3000 நபர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர், டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழக ஆட்சி மன்ற குழு உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு கழகக் கொடியினை ஏற்றி வைத்து இனிப்பு வழங்கி பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கினார் .

இந்நிகழ்ச்சிகளில் தீ. பாலாஜி, தினகரன் சண்முகம், பி சங்கர், டி.எஸ். மகாதேவன், ஜி. பழனி அரசு, தங்கம் நாராயணன், கே தயாளன், ஓ.கோபி, ஏ. மணிகண்டன், வி..டி பாபு, எம். பிரகாஷ், பி அழகர்சாமி என்.செல்வராஜ், எம். வாணி ராஜ்,பி.ராமநாதன், பி. ஆறுமுகம், புரசை சண்முகம், எம். மோகன்ராஜ் வி. லிங்கம், வி. வெங்கடேசன், ஏ. செல்வமணி, சி.கே. சுப்பிரமணி, சீ.பா.துரை கே.சேகர் கே. எத்திராஜ், எம். கணேசன்,பி. வேலாயுதம், பி. வினோத், எம்.பிரவீன், ஓ.டி செல்லப்பன், ஆர். சுப்புராயலு, கே அன்பரசு, ஜி.ராம்தாஸ் ஆர். அருள் குமார். பி.லோகு ஏ. கணேசன்,கே.ஏழுமலை, வி. மோகன்ராஜ், ஆர். மணிகண்டன், கே.குபேந்திரன், கே. பாண்டியன், ஏ.மோகன்ராஜ், இ.பிரபுதாஸ் எஸ். சாம்ராஜ்,ஏ.முரளி எஸ். பூபாலன், என்.ஆனந்தன் வி. கமலக்கண்ணன், எம். முரளி உதயன் கே. வனிதா டி.மீனா, ஜே. கீதா இ.பூங்கொடி எஸ். ராஜேஸ்வரி, எஸ். முனியம்மா, மற்றும் வட்டக் கழகத்திற்கு உட்பட்ட கழகத் தோழர்களும் கழக முன்னாடிகளும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


